**அக்டோபர் - 12**

**"காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்."   - மத் 6 : 28**

இவ்விதமாக இயற்கையிலுள்ள சாதாரண பொருள்களை எப்படி ஆராய்ந்து பார்க்க வேண்டும், கவனித்துப் பார்க்க வேண்டும் என்பதை நமது கர்த்தர் நம்முடைய கவனத்திற்கு கொண்டு வருகிறார். சிருஷ்டிகளிலுள்ள விசுவாசம், அவர் நீதியிலும், ஞானத்திலும், வல்லமையிலும், அன்பிலும் பூரணராயிருக்கிறார் என்றும் அவர் மனிதனுடைய மனது எண்ணக்கூடிய மிகவும் உயர்ந்த மிகவும் மேன்மையான குணங்களின் சேர்க்கையாயும் பிரதிநிதியாயும் இருக்கிறார் என்றுள்ள காரியங்களை சரியான நோக்கோடு ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கு ஜீவியத்தின் எல்லா காரியங்கள் சம்பந்தமாகப் படிக்க வேண்டிய படிப்பினைகள் உதவியாக இருக்கும். இவ்விதமாக கவனித்துப் பார்க்கிற இருதயம் முன்னேற்றமடைகிறது. கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளருகிறது. சிறு காரியங்களையும் கவனித்துப் பார்க்கத் தவறுகிற இருதயம், பெரிய காரியங்களை உயர்வாக மதிக்கத் தவறிப்போய், இவ்விதமாக சரியானபடி தேவனை கவனித்து அவருடைய ஏற்பாட்டை உயர்வாக மதித்து, அவருடைய குணத்தைப் பற்றிய சரியான மதிப்பை உருவாக்கிக் கொள்ளுவதிலிருந்து, அந்த இருதயம் தடுக்கப்படுகிறது. **- Z '04, 37, 38 (R 3312)**

இங்கே கர்த்தர் நம்முடைய மனதில் பதியவைக்கிற படிப்பினை நாம் சுறுசுறுப்பில்லாதவர்களாகவும், சோம்பேறிகளாகவும் இருக்க வேண்டும். என்றல்லாமல் கிருபையிலும், அறிவிலும் நம்முடைய வளர்ச்சியை உண்டாக்குவதில் அவருடன் ஒத்துழைத்துக் கொண்டு, நாம் கவலையிலிருந்து விடிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே. ஏனென்றால் வெளிநிலத்திலுள்ள லீலி புஷ்பங்கள் நிச்சயமாக உழைக்கின்றன. ஆனால் வியாகூலமோ அல்லது கவலையோபடாமல் உழைக்கின்றன. அவைகள் உறிஞ்சுகிற சாறை அவைகள் உட்கிரகிக்கின்றன. கவலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, இதைச் செய்து கொண்டு அவைகள் அழகில் வளரும் போது, நாம் உண்மையோடு சத்தியத்தை உட்கொண்டு அதன் ஆவியை உட்கிரகிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோமென்றும் அப்படி செய்யும் போது வியாகூலத்திலிருந்தும் அமைதியற்ற கவலையிலிருந்தும் விடிவிக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என்றும் அவைகள் நமக்கு பாடம் கற்பிக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு போக்கு வெளிநிலத்திலுள்ள லீலி புஷ்பங்கள் அழகை மிஞ்சுகிற ஒரு அழகோடு ஆவியின் பிரகாரமாக அழகாக வளர நம்மைச் சாத்தியமாக்கும். இது ஆர்வத்தோடே விரும்பப்பட வேண்டிய ஒரு பூரணத்துவமாகும்.! **- P '33, 147.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**நீதி 16:3; ஏரே 17:7,8; மத் 6:25-27,29-34; சங் 55:22; லூக் 12:23; பிலி 4:6; 1பேது 5:7; யோபு 38:41; சங் 104:10,11.**

**கோபுர வாசிப்பு : Z '16, 341 (R 5990).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் கவலைப்பட்டேனா அல்லது நம்பிக்கையாயிருந்தேனா? அல்லது தடையாயிருந்தது எவை? என்ன உதவியாயிருந்தது எவை? என்ன பலனோடு?**